**தலைப்பு 201 - பௌத்த சமய அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 201 - பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 27 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,264.76 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,146.43 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 118.33 மில்லியன் அதாவது 9.36 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,216.49 | 1,102.16 | 114.33 | 9.40 |
| மூலதனம் | 48.27 | 44.27 | 4.00 | 8.29 |
| **மொத்தம்** | **1,264.76** | **1,146.43** | **118.33** | **9.36** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25.00 | 24.35 | 15.00 | 18.68 | 58.00 | 46.87 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 04 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.36 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0036/000 | 0.55 |
| 6000/0000/00/0002/0047/000 | 0.05 |
| 6000/0000/00/0018/0001/000 | 0.14 |
| 6000/0000/00/0019/0002/000 | 1.62 |
| மொத்தம் | 2.36 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

(அ) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 800,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 13 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 15 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய எனினும் 2017 ஆம் ஆண்டின் போது தீர்வுசெய்யப்பட்ட ரூபா 200,094 தொகையான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

6000/00/00/0019/0002 ஆம் இலக்க (உள்நாட்டு) கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா.1,616,102 மீதியொன்று இருந்ததுடன் அதில் 93 சதவீதமான ரூபா. 1,511,632 தொகை குறித்த நோக்கமான நிபுணத்துவ வேலைத்திட்டங்கள் வெசாக் உற்சவம், பௌத்த கொடிகள் வழங்கல், விஹாரை அபிவிருத்தி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற வேலைத்திட்டங்களுக்காக பயன்படுத்தாமல் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டில் இவ்வைப்பு மீதிகளில் ரூபா. 366,872 அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா. 977,232 தொகை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 நவெம்பர் 30 இல் உள்ளவாறு மீதி ரூபா. 251,998 ஆக இருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 20101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்க கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 681,447 ஆகக் காணப்பட்டதுடன் அம்மீதிகள் ஒரு 01 வருடம் முதல் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன. அந்நிலுவை கடன்மீதிகளில் ரூபா. 569,977 தொகை 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா. 111,470 மீதி மேலும் நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டவணைகள் தயாரிக்கும் போது உரிய திகதிகளும் தேவையான பிரகாரம் இறுதியாக கடன் தவணை அறவிடப்பட்ட திகதிகளும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள், ஆலயங்கள் அதிகாரச்சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற விகாரைகள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகளை சரி செய்வதற்கு திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

பௌத்த அகராதி தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொழிகளினுடனான 1753 பெறுமதியான புத்தகங்கள் திணைக்களத்தின் கீழ் பௌத்த அகராதிகள் அலுவலகத்தில் காணப்பட்ட போதிலும் அப்புத்தகங்களுக்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 பொறுப்புக்களுக்கு உட்படல்**

நிதிப்பபிரமாணம் 94(1) இற்கு முரணாக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை மிகைத்து ரூபா 48.97 மில்லியன் பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது.

**3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வாளர் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், பரிசோதனையின் போது இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| | **இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம்** | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 395(ஈ) | | 2016 ஆம் ஆண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை 04 மாத காலத்திற்காக வங்கிக் கணக்கிணக்க கூற்று 2017 யூன் மாதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| | நிதிப்பிரமாணம் 454 | 2,200,110 | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 257,225 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் ரூபா.1,943,085 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான களஞ்சிய பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 செயலாற்றல்**

**போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

**1931 இன் 19 ஆம் இலக்க விஹாரைகள் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்.**

(அ) 1931 இன் 19 ஆம் இலக்க விஹாரைகள் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் 36(2) பிரிவின் பிரகாரம் அரையாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் விஹாரைகள் மற்றும் தேவாலயங்களால் அரையாண்டு பாதீடு பௌத்த அலுவலகள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரையாண்டு பாதீடு மற்றும் வருடாந்த மதிப்பிட்டிற்கு இடையே 6 சதவீதம் முதல் 127 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது. திணைக்களத்தினால் மதிப்பீடு மற்றும் அரையாண்டு பாதீடு தொடர்பாக பரிட்சீக்கப்பட்டு விலகல் தொடர்பாக புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டு போலவே மதிப்பீடு மற்றும் அரையாண்டு பாதீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டமை தவிர விஹாரைகள் மற்றும் தேவாலயங்களின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1931 இன் 19 ஆம் இலக்க விஹாரைகள் தேவாலயங்கள் கட்டளைச் சட்டத்தின் 36(2) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற அரையாண்டு கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த அந்தந்த ஆண்டுகளில் ஆவணங்கள் மற்றும சொத்துக்கள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் குறைவு தொடர்பான விரிவான அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

**பௌத்த ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பௌத்த அகராதி பிரதான ஆசிரியர் பதவிகள் 1990 ஆம் ஆண்டு முதலாகவும் பிரதி ஆசிரியர் பதவி 2004 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன், அவ் வெற்றிடங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக பௌத்த அகராதிகளின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) பௌத்த அகராதிகளை மீள திருத்தும் வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தகுதியுடை நிரந்தர பதிப்பாசிரியர் குழுவொன்றின் தேவைப்பாடு தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சர்வதேச தேவைப்பாடொன்றாக கருதி ஆங்கில மொழியில் பௌத்த அகராதியை வடிவமைத்து சர்வதேசத்திற்கு பிரசித்தப்படுத்தும் செயற்பாட்டிற்காக பதிப்பாசிரியர்களுக்கு சம்பளம் மற்றும் புத்தகங்கள் அச்சிட்டுக் கட்டணமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 60 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்துள்ள அச் செயற்பாடு இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பௌத்த அகராதியை தயாரிப்பதற்காக ஆரம்ப முதல் இது வரை பயன்படுத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொழிகளுடன் கூடிய 1753

புத்தகங்கள் இந்த அலுவலகத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் இப் புத்தகங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தி பாதுகாப்பாக வைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 776 | 675 | 101 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 26 | 10 |
| (v) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | - | 03 |
| | **மொத்தம்** | **828** | **712** | **116** |